# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | O.S.No.78/2013 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | வா.சா-01 (PW- 01) |
| பெயர் | :- | புஷ்பா |
| தேதி | :- | 24-03-2026 |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**கூடுதல் சாட்சியம்மீது குறுக்குவிசாரணை**

2013-ஆம் ஆண்டு நானும் எனது சகோதரிகளும் இந்த வழக்கை தொடுத்தோம் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் ஏற்கனவே சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். ஏற்கனவே நான் சொன்ன சாட்சியத்தில் பிரதிவாதிக்கு ஆதரவாக உள்ள விடையங்களை வீழ்த்துவதற்காக விடுப்பட்டவற்றை நிரப்ப நான் புதிதாக ஆவணங்களை புனைந்து கூடுதல் சாட்சியம் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

இந்த வழக்கை தொடுக்க வழக்குரைஞருக்கு விவரங்கள் சொன்னது நாங்கள்தான். எனக்கு எழுதப் படிக்க தெரியாது. கூடுதல் சாட்சியத்தில் தாக்கல்செய்துள்ள 06 ஆவணங்களை வழக்கு தொடுத்தபோதே வழக்குரைஞரிடம் கொடுத்தேன் என்றால் சரிதான். தற்போது தாக்கல்-செய்துள்ள ஆவணங்களை ஏற்கனவே தாக்கல்செய்துள்ளோம் என்று எனக்குத் தெரியும். எத்தனை ஆவணம் தாக்கல்செய்துள்ளேன் என்று எனக்குத் தெரியாது. முதல்விசாரணையில் நான் தற்போது தாக்கல்

-செய்துள்ள ஆவணங்கள் எங்கிருந்து கிடைத்தன என்று சொல்லவில்லை என்றால் சரிதான். வாதி தரப்பு 02-ஆம் சான்றாவணம் 25.02.2025-ஆம் தேதியன்றே பெறப்பட்டு இருக்கிறது என்றால் சரிதான். அந்த ஆவணம் பற்றி பிரதிவாதி தரப்பில் கேள்வி கேட்டதற்குபிறகு அவற்றை தயார்செய்து தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

வாதி தரப்பு 03-ஆம் சான்றாவணமாக உள்ள ஆவணம் வழக்குரை -யில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தை முதன்முதலில் சாட்சியம் அளித்தபோது குறியீடு செய்யவில்லை என்றால் சரிதான். வாதி தரப்பு 04-ஆம், 05-ஆம் சான்றாவணமாக உள்ள ஆவணங்கள் என்ன ஆவணம் என்று எனக்குத் தெரியாது. அந்த பத்திரங் -களை யார் யாருக்கு நிறைவேற்றிக் கொடுத்தது, எப்போது நிறைவேற்றப் -பட்டது, அதில் சம்மந்தப்பட்ட சொத்தின் விவரம், சான்றொப்பம் இட்டது யார் என்பது போன்ற விவரங்கள் எனக்குத் தெரியுமா என்றால் தற்போது தெரியவில்லை. பிரமாண பத்திரிக்கை என்ன என்றால் எனக்குத் தெரிய -வில்லை. விளம்புகை என்றால் எனக்கு என்னவென்று தெரியாது. FMB என்றால் என்ன என்று எனக்குத் தெரியாது. இந்த வழக்கை தொடுப் -பதற்குமுன் வில்லங்க சான்று எடுத்து பார்த்தேன். இந்திராணி எடுத்து பார்த்தார். நான் பார்க்கவில்லை.

04-ஆம், 05-ஆம் சான்றாவணங்களில் கண்டுள்ள சொத்தில் யார் யார் எப்படி அனுபோகம் செய்கிறார்கள் என்றால் மோகன்ராஜ் என்பவரும் முருகன் என்பவரும் கடை வைத்தும் வீடு கட்டியும் விவசாயம் செய்தும் அனுபோகம் செய்கிறார்கள். நான் சொல்லும் நபர்கள் பெயரில் மேற்சொன்ன ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு வழக்குச்

சொத்தில் உரிமையே இல்லை என்றும் நாங்கள் பொய்யாக வழக்கிட்டு பொய் வாதம் செய்கிறோம் என்றும் சொன்னால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.